(87)

இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.A.சதானந்தம் அவர்கள், தலைவர்

மனைப்பிரிவு அனுமதி எண் : 01/2024-2025

நாள் : 10-05-2024

பொருள் : மனைப்பிரிவு - இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சி செம்மேடு கிராமம் க.ச.எண் : 928/1B3 காலையில் அமையும் 2.42 ஏக்கரில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு - இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் - சார்பு

பார்வை :

1) திரு.E.ராஜ்குமார் மற்றும் மூன்று நபர் அவர்களின் விண்ணப்பம் நாள் : 15-03-2024

2) உறுப்பினர் செயலர் / இணைஇயக்குனர் கோயம்புத்தூர், உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கை ந.க.எண் : CBEREGN / Z5IHNGDQ / 2023/2024/TCP நாள் : 21-03-2024

3) திரு.E.ராஜ்குமார் மற்றும் மூன்று நபர் அவர்களின் தான செட்டில்மண்ட் பத்திரம் எண் : 2224/2024 நாள் : 14-03-2024

4) ஊராட்சி மன்ற தீர்மானம் எண் : எதிர்நோக்கி

5) திரு.E.ராஜ்குமார் மற்றும் மூன்று நபர் அவர்களின் உறுதிமொழி பத்திரம் நாள் : 08-05-2024

உத்தரவு :

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம் இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சி செம்மேடு கிராமம் க.ச.எண் : 928/1B3 ல் 2.42 ஏக்கர் (9800 சதுர மீட்டர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை

2ல் காண் உள்ளூர் திட்டகுழுமம் அனுமதி மற்றும் நிபந்தனைகளின் படியும் தொழில் நுட்ப அனுமதி எண் : ம வ/கோ.மா.எண் : 85/2024 (இணையவழி) மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

பார்வை 3 ல் காண் தான செட்டில்மண்ட் பத்திரம் எண் : 2224/2024 நாள் : 14-03-2024 உள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக சொத்துக்களை ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து சாலைகளும் தார் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி (10000) கட்டப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் உள்ள அனைத்து குடியிருப்பு மனைகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படும், மனைப்பிரிவில் உரிமையாளரால் தேவையான அளவிற்கு தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படுவதாகவும் சாக்கடை வடிகால் கழிவுநீர்கள் மனைப்பிரிவு மனையிடங்களிலேயே சோக்பிட் அமைத்துக் கொள்வதாகவும் மற்றும் ஊராட்சிக்க ஒப்படைக்கப்பட்ட ரோடு (சாலை) மற்றும் பொது இடங்களை ஊராட்சியின் பெயரில் SUB DIVISION செய்து கொடுக்க ஒப்புக்கொண்டு பார்வை 5 ல் காண் உறுதிமொழி பத்திர ஆவணம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 4 ல் காண் ஊராட்சி தீர்மானம் அனுமதி எதிர்நோக்கி பார்வை 5 ல் காண் மனுதாரர் மழைநீர் வடிகால் வசதி அமைத்தும் தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் மற்றும் மின் இணைப்புகள் ஊராட்சிக்கு பின் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட உறுதிமொழியை ஏற்று அரசுக்கு செலுத்த வேண்டிய கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் மனைப்பிரிவு 2.42 ஏக்கருக்கு சந்தை மதிப்பு 3% தொகையும் அரசு தலைப்பான 0217 Urban Development – 60 other Urban Development Schemes – 800 other Receipts under Land Use Conversion Charges – 27 ல் Challan No : 2024052015958 / நாள் : 02-05-2024 ன் படி ரூ.271000/- SBI வங்கி கணகக்கில் செலுத்தப்பட்டுள்ளது மேலும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய ரூ.56450 ஐ HDFC BANK- NET BANKING மூலம் செலுத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட மனைப்பிரிவில் 01 முதல் 42 வரை மனைகளை விற்பனை செய்ய இதன் மூலம் இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது

நிபந்தனைகள் :

1) ஆழ்குழாய் கிணறு அமைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இணைத்து குடியிருப்பு மனைகளுக்கு இணைப்பு வழங்கப்பட வேண்டும்

2) பொது உபயோகத்திற்கு வழங்கப்பட்ட இடத்தை சுற்றியும் முள்கம்பிவேலி அமைத்து ஊராட்சிக்கு செந்தமான பூங்கா என பெயர் பலகை அமைக்க வேண்டும்

3) மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட உள்ளூர் திட்டகுழுமம் அனுமதி எண் ஊராட்சி அனுமதி எண் போன்றவை மனைப்பிரிவின் முகப்பில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்

4) மனைப்பிரிவில் ஏற்கடுத்தப்படும் ஆழ்குழாய் கிணற்றிக்கும் ஊராட்சி தலைவர் பெயரில் 0.5 கு வே மின் இணைப்பு பெற்று ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்

5) உத்தேச மனைப்பிரிவிற்கு தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டும்

6) மனைப்பிரிவில் வீடுகள் 50% மேலாக அபிவிருத்தி அடையும் வரை மின் கட்டணம் மனுதாரர் தன் சொந்த பொறுப்பில் மிக் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும்

7) பார்வை 1 ல் கண்ட உள்ளூர் திட்டகுழுமம் நிபந்தனைகள் மற்றும் இவ் உத்தரவில் கண்ட நிபந்தனைகளும் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும், தவறும் பட்சத்தில் முன் அறிவிப்பின்றி இவ்வாணை இரத்து செய்ய நேரிடும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

10/5/24

President

Ikkarai Boluvampatti Panchayat

10/5/24

இணைப்பு :

1) உள்ளூர் திட்டகுழுமம் உத்தரவு
2) மனைப்பிரிவு வரைபடம்

பெறுநர் :

திரு.E.ராஜ்குமார் மற்றும் மூன்று நபர்கள்

106 சென்னியாண்டவர் வீதி, செம்மேடு,

இக்கரை போளுவாம்பட்டி, கோவை